www.Padasalai.Net www.TrbTnpsc.com

ASS

# மூன்றாம் பருவம் – தொகுத்தறி மதிப்பீட்டுத் தேர்வு – 2025

6 - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 2.00 மணி

மதிப்பெண்கள் : 60

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4 X 1 = 4

1. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர்
   அ) கோவை ஆ) மதுரை இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்
2. அன்னை தெரசாவிற்கு ...................... க்கான நோபல் பரிசு கிடைத்தது.
   அ) பொருளாதாரம் ஆ) இயற்பியல் இ) மருத்துவம் ஈ) அமைதி
3. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் .....................
   அ) அழிவு ஆ) துன்பம் இ) சுறுசுறுப்பு ஈ) சோகம்
4. இனிமை + உயிர் என்பதை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .........................
   அ) இன் உயிர் ஆ) இனிய உயிர் இ) இன்னுயிர் ஈ) இனிமை உயிர்

**II கோடிட்ட இடம் நிரப்புக.** 2 X 1 = 2

5. இலக்கண அடிப்படையில் சொற்கள் ........................ வகைப்படும்.
6. வாழ்வில் உயர கடினமாக ........................... வேண்டும்.

**III பொருத்துக.** 4 X 1 = 4

7. இலக்கிய மாநாடு - பாரதியார்
8. தமிழ்நாட்டுக் கவிஞர் - சென்னை
9. குற்றாலம் - ஜி.யு.போப்
10. தமிழ்க் கையேடு - அருவி

**IV கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்து மட்டும் விடை தருக.** 5X2 = 10

11. தாராபாரதியின் பாடலில் இடம் பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களை எழுதுக.
12. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?
13. அறிவின் பயன் யாது?
14. உயர்வு நவிற்சி அணி என்பது யாது?
15. சொற்களின் வகைகளை எழுதுக.
16. யாரால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது?
17. பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?
18. கோமுகி என்பதன் பொருள் யாது?

SIVANANDHA K M.A.,B.Ed
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**V எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.** 3 X 3 = 9

19. மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?

20. நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மாணவர்கள் செய்ய வேண்டியவைப் பற்றி சிந்தித்து எழுதுக.

21. காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.

22. எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழ புத்த பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?

**VI அடிமாறாமல் எழுதுக.** 4 + 2 = 6

23. `தம்முயிர் போல் ........' எனத் தொடங்கும் பராபரக்கண்ணி பாடலை எழுதுக.

24. பகுத்துண்டு எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**VII அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 5 X 2 = 10

25. **கலைச்சொல் தருக. :** அ) LITERATURE ஆ) HUMANITY

26. **இரு பொருள் தருக. :** அ) திங்கள் ஆ) ஓடு

27. **பின்வரும் தொடர்களில் அடிக்கோடிட்ட சொற்கள் எவ்வகை பெயர்கள் என எழுதுக.**

அ) <u>மாலை</u> முழுவதும் விளையாட்டு. ஆ) நீதி நூல் பயில் என்கிறார் <u>பாரதியார்.</u>

28. **கீழ்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

அ) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.

ஆ) அஃது நகரத்திற்கு செல்லும் வழி.

29. **கட்டத்தில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்களை உருவாக்குக.**

| | |
|---|---|
| மாலையில் | கற்போம் |
| பெரியோரை | எழுவோம் |
| நூல் பல | விளையாடுவோம் |
| அதிகாலையில் | வணங்குவோம் |

SIVANANDHA K M.A.,B.Ed
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

**VIII ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.** 1X 7 = 7

30. அ) வேலு நாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வை எழுதுக. ***(அல்லது)***

ஆ) `பாதம்' கதையைச் சுருக்கமாக எழுதுக.

**IX கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க.**

31. அ) நூல்கள் அனுப்ப வேண்டிப் பதிப்பகத்தாருக்குக் கடிதம் எழுதுக. 1 X 8 = 8

***(அல்லது)*** தேசிய ஒருமைப்பாடு என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com